International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஹரணி படைப்புகளின் பெண்ணியச் சிந்தனைகள்

**பா. வீரராசு**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் வா. கணபதி ராமன்**
இணைப் பேராசிரியர், தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் – 608002

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் பெண்ணிய எழுத்துக்கள் ஒருபுறம் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை வெளிப்படுத்தியதோடு, மறுபுறம் பெண்மீது நிகழும் சமூக, கலாச்சார, பொருளாதார ஒடுக்குமுறைளை ஆராயும் கொள்கை நிலையாகவும் அமைந்துள்ளன. 20ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழ் பெண்ணிய இலக்கியம் பல்வேறு திசைகளில் விரிந்தது. இவையுள் தனித்துவமான குரலாகத் திகழ்பவர் ஹரணி. அவரது, படைப்புகள் பெண்களின் உளவியல், உடல், அரசியல், குடும்பக் கட்டமைப்பு, பாலின, சாதி, இணைப்பியல், அத்துடன் பெண்களின் சுயநிலையும் போராட்டங்களையும் ஆழமாகப் புலப்படுத்துகின்றன. இந்தக் கட்டுரை, ஹரணி படைப்புகளில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளின் பல்வேறு அடுக்குகளையும் அம்சங்களையும் ஆய்வுக்குட்படுத்துகிறது.

**பெண்ணியம் வரையறு**

பெண்ணியம் என்பது பெண்களின் சம உரிமைகள். சுயநிலை, உடல் - மனம் அறிவு ஆகியவற்றின் சுதந்திரம் குறித்து வலியுறுத்தும் சிந்தனைக் கோட்பாடு. ஹரணி கதை உலகில் இது நேரடி கோஷங்களாக அல்லாது "நுண்ணிய ஆனால் ஆழமான வாழ்க்கை அனுபவங்களின் மூலம்" வெளிப்படுகிறது.

பெண் வாழ்க்கையில் "அரசியல்" - அது குடும்பம், உடல், உறவுகள், வேலை, பொருளாதாரம் எனப் பல தளங்களில் - கதாபாத்திரங்களின் "நினைவுகள், மௌனங்கள், எதிரிப்புகள், விரக்திகள், ஆசைகள், பயங்கள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகிறது.

**பெண்ணியம் பற்றி அறிஞர்கள் கருத்து:**

பெண்ணிய சிந்தனைகள் பற்றி பிரான்சு நாட்டைச் சேர்ந்த பெண்ணியத் திறனாய்வாளர் சய்மோன் தெ பௌவோ எழுதிய இரண்டாவது பாலினம் என்ற நூல் 1949ஆம் ஆண்டு வெளிவந்தது.

> **"பெண்ணியம் ஒரு அறிவார்ந்து கொள்கையாகவும்**
> **போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது**[1]

என்று பெண்ணியத்தைப் பற்றி கூறுப்பிடுகிறார்.

பெண்ணின் சிறப்பு பற்றி தமிழகத்தின் புரட்சிக் கவிஞரான பாரதிதாசன் பெண்ணை சக்தியின் வடிவமாகப் பாவித்து இவ்வாறு பாடுகிறார்.

> **வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாடடா**
> **மானஞ் சேர்க்கு மனைவியன் வார்த்தைகள்**
> **கவி யழிப்பது பெண்க ளறமடா**
> **கைகள், கோத்துக் களித்துநின் றாடுவோம்…**
> **பெண்ண றத்தினை யான்மர்கள் வீரந்தான்**
> **பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை**

**கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே**
**காத லின்பத்தைர் காத்திடு வோமடா**[2]

இதையே எங்கெங்கும் காணும் சக்தியடா என்கிறார் பாரதிதாசன்.

**சங்ககாலப் பெண்களின் நிலை**

காதலும் வீரமும் இரு கண்களாகப் போற்றப் பட்ட காலம் சங்க காலம். வீர வாழ்வைப் புறவாழ்வு என்றும் காதல் வாழ்வை அகவாழ்வு என்றும் கொண்டு சங்க இலக்கியம் படைக்கப் பட்டது. வீரம் முதன்மைப்படுத்தப்பட்டது. இதனைச் சார்ந்தே சுகவாழ்வு அமைந்தது. ஆணாதிக்கம் பின்புலமாக இருந்த காலம் அது. இதற்கு ஏராளமான சான்றுகள் சங்க இலக்கியத்தி லிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

அவரவர்க்கென்று கடமைகள் இருந்தன.

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**[3]

இருப்பினும் எல்லாக் கடமைகளும் ஆண் வினையாகிய வீரத்தையும் அதனால் பெறும் புகழையுமே மையப்படுத்தி அமைந்தன. எனவே பெண் ஆணின் நிழல் சார்பு கொண்டவளாகவே இருந்தாள். இதையே போதுமென்று விரும்பிய பெண்களே அன்று மிகுதி. எனவே வினை என்பது ஆடவன் உயிராகும் என்றும் வினையாற் றும் ஆடவன் பெண்ணுக்கு உயிரென்றும் பாடி வைத்தார்கள்.

**"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க் காடவருயிரென..."**[4]

எனக் குறுந்தொகை எனும் இலக்கியம் பேசுகிறது.

**வாழ்க்கைத் தேர்வில் அறத்தொடு பெண்கள் நிற்றல்**

ஹரணி படைப்புகளில் பெண்கள் வாழ்க்கைத் துணைவரைத் தேர்வு செய்வது பாரம்பரிய முறைகளில் இருந்து விலகி தன்னாட்சி, தனிநபர் சுதந்திரம் மற்றும் உணர்ச்சி அறிவு சார்ந்த முடிவு என்று காட்டப்படுகிறது. அவற்றில் பொதுவாகக் காணப்படும் முக்கிய அம்சங்கள். அவைகள்,

"தனிப்பட்ட விருப்பம், சமத்துவத்தை அடிப்படை நிபந்தனையாகக் காணல், அறிவு - உணர்ச்சி பொருத்தம், பெருளாதார - சமூக நிலையை விட குண நலன்களுக்கு முக்கியத்துவம், தனித்திறன் மற்றும் கனவுகளுக்கு மதிப்பு தரும் துணைவர், 'சுய முடிவு' மையமாக அமைவது இவ்வாறு வாழ்க்கை துணைவனைத் தேர்ந்தெடுக்கிறார்.

**தனிப்பட்ட விருப்பங்கள்**

பெண்கள் குடும்ப - சமூக அழுத்தங்களைவிட
தங்களின் உணர்ச்சி
விருப்பம்
வாழ்க்கை இலக்குகள்

என்பவற்றை முன்னிலைப்படுத்தி கணவரைத் தேர்ந்தெடுப்பது பல கதைகளின் மையமாக இருக்கும்.

**சமத்துவத்தை அடிப்படை நிபந்தனையாகக் காணல்**

வாழ்க்கைத் துணைவரிடம் பெண்கள் எதிர்பார்ப்பது
சமமான மரியாதை
உரிமையின் சமநிலை
பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் மனோதிடம்

**அறிவு - உணர்ச்சி பொருத்தம்**

உணர்ச்சி மட்டுமல்லாமல்,
கல்வி,
சிந்தனை,
மதிப்பு உணர்வு,
வாழ்க்கை நோக்கு

ஆகியவற்றின் பொருத்தத்தையும் அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யும் பெண் கதாபாத்திரங் கள் பொதுவாக வருணிக்கப்படுகிறது.

**பொருளாதார - சமூக நிலையை விட குணநலன்களுக்கு முக்கியத்துவம்**

பாரம்பரிய "status" அடிப்படையிலான தேர்வு முறையை விட
நேர்மை,
பரிவு,
ஆதரவு அளிக்கும் தன்மை,
மனிதநேயம்

ஆகிய குணாதிசயங்களையே பெண்கள் முன்னிலைப்படுத்தும் விதமாகக் காட்டப்படும்.

**தனித்திறன் மற்றும் கனவுகளுக்கு மதிப்பு தரும் துணைவர்**

பெண்களின் கல்வி, வேலை, திறமை, கனவுகள் ஆகியவற்றை ஆதரிக்கக்கூடிய ஆண்களைத் தேர்வு செய்ய முயலும் படிமங்கள் அதிகமாக இருக்கும்.

**'சுய முடிவு' மையமாக அமைவது**

பெண் கதாபாத்திரம் "மணவாழ்க்கை வேண்டுமா வேண்டாமா" என்பதையும் தானே தீர்மானிக்கும் சுதந்திரம் பெற்றவராகக் காட்சியளிக்கிறாள். இதுவே ஹரணி படைப்புகளின் முக்கியான பெண்ணிய நோக்கு.

**பெண்மையின் வீரம்**

தொன்று தொட்டு ஆணாதிக்கச் சமூக இடிபாடு களில் சிக்கியே பெண் தவித்துக் கொண்டிருக்கி றாள். அவள் எழும்பி வருவதற்கான பல முயற்சிகள் எல்லா நிலைகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கு நிலைமை நல்ல வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது எனலாம். பெண் நல்ல கல்வியும், சிறப்பாகப் பணியாற்றலும் என மேலேறிக் கொண்டிருக்கிறாள். ஆணுக்கு நிகராக வும், ஆணைவிஞ்சியும் எல்லாத் துறைகளிலும் கால் பதியாத இடம் இல்லை எனுமளவிற்கு பெண் இயங்கி வருகிறாள்.

ஓட்டுநர், நடத்துதர், நிர்வாகப் பொறுப்பு, பாதுகாப்புத்துறை இன்னும் பல நவீன துறைகளில் பெண்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இதனை பாரதியார்,

**பெண்ணைப் பெண்ணாக நடமாட வைக்கும்.**
**தன்னம்பிக்கை வளர்க்கும்.**
**பயம் போக்கும்,.**
**சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட துணிவு கொடுக்கும்.**
**பெண் உரிமையை நிலைநாட்ட வைக்கும்.**
**நல்ல பிள்ளைகளைத் தேசத்திற்குத் தரும்.**
**நல்ல சமூகம்.**
**நல்ல பண்பாடு.**
**நல்ல தேசம்.**
**நல்ல செயல்கள் என நன்மைகள் விளையும்!**

பெண் கல்வி என்பது விடுதலையின் வெளிப்பாடு.

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காண் என்று கும்மியடி**[5]

என்பதை காட்டிலும் உணர வேண்டும் என்கிறார் பாரதியார்.

**எழுத்தாளர்களின் பார்வையில் பெண்களின் நிலை**

ஒரு சமூகத்தின் அக்கறையின் அடையாளமாகப் பெண்ணைப் பார்க்க வேண்டும். ஒரு குடும்பத்தின் உயிர் என்பது பெண்ணை மையப் படுத்தியே அமைகிறது. பெண்ணை சக்தியின் உருவாகப் பாரதி பார்க்கிறார். பெண்களின் நிலை என்பது காலங் காலமாக அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட வடிவிலேயே இருந்து வந்தமைக்குப் பல சான்றுகள் வரலாற்றிலும் இலக்கியங்களிலும் காணக் கிடைக்கின்றன.

சிறுகதை எழுத்தாளர்கள் பெண், பெண் நிலை, பெண்ணியம் தொடர்பாக பல நிலைப்பாடுகளைத் தங்கள் சிறுகதைகளில் எழுதினார்கள். 1962 சமுதாய மரபுகள் மாறத்தொடங்கிய காலக் கட்டத்தில் பெரும்பாலும் வரதட்சிணைக் கொடுமை, கைம்பெண் கொடுமை இவற்றை எதிர்த்தே பெண்ணுரிமைப் போராட்டங்கள் அமைந்தன.

அவற்றுகான தீர்வு சொல்லப்படாத நிலையில் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கை நிலையை அப்படியே யதார்த்தமாகப் பிரதிபலித்த ஜெயகாந்தன் மிகப்பெரும் சமூகப் பாதிப்பை ஏற்படுத்தினார். இவரது பெண்கள் துணிச்சலாக வும் தானாக தன்னுடைய வாழ்வின் முடிவாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களாகவும்

இவரைத் தொடர்ந்து பல எழுத்தாளர்கள் கிட்டத்தட்ட ஆயிரங்கணக்கில் தமிழ் எழுத்தாளர் கள் எழுதினாலும் சிலரே பெண் நிலையைக் கருத்தில் கொண்டார்கள் எனலாம்.

**குறிப்பிடத்தக்கப் பெண் எழுத்தாளர்கள்**

ராஜம் கிருஷ்ணன்
ஆர் சூடாமணி
அம்மை
சிவசங்கரி
காவேரி
சிவகாமி
திலகவதி
உமா மகேஷ்வரி

போன்றவர்கள் தமிழ் சிறுகதை உலகில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் எழுத்தாளர்கள் ஆவார்.

**பெண்களின் நிர்வாக ஆளுமை**

நிர்வகித்தல் என்பதற்குக் கட்டுப்படுத்துதல், கட்டுப்படுதல் எனும் இரு நிலைகளில் பொருள் படுத்திக் கொள்ளலாம். நிர்வகிக்கும் தலைமை கட்டுப்படுத்தும். கேட்டுப் பணிபுரியும் ஊழியம் கட்டுப்படும். இரண்டில் எது முரண்பட்டாலும் நிர்வாகம் சிதறிவிடும். நிர்வகித்தல் என்பது குடும்பத்தில் இருந்து தொடங்கி சமூகத்தின் உச்சக்கட்ட செயல்பாடுவாரை நீண்டிருக்கிறது என்கிறார் எழுத்தாளர் ஹரணி.

முதலில் குடும்பத்திற்கு வருவோம், குடும்பம் நிர்வாகம் எனும்போது சிலவற்றை அடிப்படை யாகக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நிர்வாகத் தன்மையில் ஆணைவிட பெண் திறமையாகச் செயல்படுகிறாள் என்று ஹரணி பின்வருமாறு கூறுகிறார்.

ஆண் சம்பாதித்தல் பெண் சம்பாதித்தல் இருவரும் சேர்ந்து செலவுகளைக் கவனித்தல்.

இருவரும் சம்பாதித்தல் பெண்ணிடம் பொறுப்புகளைத் தள்ளிவிடல்.

ஒரு நாளின் பெரும் பகுதியும் பெண்களுக்கு வீடே அமைந்து விடுகிறது. வேலைக்குப் போகிற பெண்ணாக இருந்தாலும் அலுவலகத்திலும் மனசுக்குள் வீடு பற்றிய சிந்தனை ஒரு பக்கம் ஓடிக்கொண்டே இருக்கும். பெண்ணின் நிலைகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

**ஆண்கள் இயல்பில் நல்லவர்கள். அன்புக்குக்**
**கட்டுப்பட்டவர்கள். அதிகம் கோபமும் உணர்ச்சி**
**வசமும் படுவார்கள். பக்குவமாக அமைதிப்**
**படுத்திச் சொன்னால் கேட்டுக்கொள்வார்கள்.**
**சூழலும் உறவுநிலையில் சில பெண்களாலுமே**
**ஆண்கள் தங்களைப் புரிந்து' கொள்ள மறுக்கிறார்கள்**[6]

இவ்வாறு ஹரணி குறிப்பிடுகிறார்.

**இல்வாழ்க்கையில் பெண்கள்** திருவள்ளுவர் அறம் என்றால் அது இல்லறம் ஒன்றையே குறிக்கும் என்ற கருத்துடையவர் இதனை வள்ளுவர்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**[7]

இவ்வாறு வள்ளுவர் இல்வாழ்க்கையினைக் கூறுகிறார். இல்வாழ்வு இருவரும் கொள்ளும் அன்பும் மற்றவருடன் கலந்து வாழும் அறமும் உடைய தாயின் அவையே இல்லறத்தின்

பண்பும் பயனும் ஆகும் என்கிறார்.

**குழந்தையின் வளர்ப்பு**

ஹரணி தனது இலக்கியப் படைப்புகளின் குழந்தைகளின் வளர்ப்பு முறை பற்றிப் பல்வேறு நிலைகளில் எடுத்துக் கூறுகிறார்.

தாயாயினும் சரி, தந்தையாயினும் சரி இருவரும் நிரம்பப் பெற்றவர்கள் . குழந்தைகள் படித்து ஆளாகி அவர்களுக்கென ஒரு வாழ்க்கையில் காலூன்றி நிற்கும் வரை நிழலாகப் பெற்றோர் இயங்க வேண்டிய அவசியமும் பொறுப்பும் இருக்கிறது. என்னதான் கடுமையான வேலைப் பளு இருப்பினும் தினமும் அரை மணி நேரம் (குறைந்தபட்சம்) உங்கள் குழந்தைக்காக நேரம் ஒதுக்க வேண்டும்.

நேரம் ஒதுக்கியபின் அவனோடு பாடம் தொடர்பாக அவனிடம் விருப்பம் தொடர்பாக பேசுங்கள் அதற்கு உங்களுடைய பங்கு பொறுப்புப் பற்றி நம்பிக்கை ஊட்டுங்கள். நன்கு படி உனக்கு வேண்டியது எதுவாயினும் அது தொடர்பாக செய்து தருகிறேன் என்பன போன்று எந்த நேரமும் படி படி என மந்திரம் ஓதாதீர்கள். ஒரு தடவை சொல்லுங்கள் என அன்போடு அழுத்தமாய் கூறுகிறார் எழுத்தாளர் ஹரணி.

இதனை வள்ளுவர் மக்களின் சிறப்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்

**குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்**[8]

தாம் பெற்ற மக்களின் மழலைப் பேச்சைக் கேட்காதவர்கள் தான் குழல் இனிதென்றும் யாழ் இனிதென்றும் சொல்லுவார்கள். இந்த உலகத்தில் மக்களால் வரும் இன்பத்தை திருவள்ளுவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்**[9]

தன் மகனைக் கல்வி கேள்வி பண்புகளால் நிறைந்த சான்றோர் என ஊரார் பேசக் கேட்ட தாய் அவனை ஈன்றதைக் காட்டிலும் பெரிதும் உவப்பாள். பிறர் யாரோ பாராட்டுவதைக் கேட்பதிலேதான் மகிழ்ச்சி கூடுதலாகும் என திருவள்ளுவர் கூறுகிறார்.

**பெண் கல்வி**

பெண்ணுக்குக் கல்வி அவசியம் என்பதை சமூகம் உணர்ந்துள்ளது. இருப்பினும் பெண் கல்வி கற்று மேலேறிப் போவதில் மறைமுகத் தடைகள் இருக்கத்தான் செய்கின்றன. இவை சமயங்களில் மின்சார வேலியைப் போல பெண் கல்வி கற்க முயல்வதற்குத் தடையாக இயங்குகிறது. ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கு மட்டுமே உதவுகிறது. ஒரு பெண் கல்வி கற்றால் அது ஒரு குடும்பத்துக்கே பயனாகிறது என்கிற வழக்குண்டு. இதனை எழுத்தாளர் ஹரணி பெண்ணின் கல்வி சிறப்பை இவ்வாறு கூறுகிறார்.

ஒரு குடும்பத்தின் வேர், விலாசம், உயிர்ப்பு எல்லாமே பெண்தான். அடர்ந்த இருளைப் போக்கும் விளக்குப் போல பெண் கல்வி கற்றால் குடும்பம் ஒளி பெறுகிறது. குழந்தை பிறந்து, வளர்ந்து ஆளாகி நிற்கும் வரை அது தாயுடன் இருக்கும் காலம் அதிகம். எனவே ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதாவது என்பது போல உலகியலுக்கான கல்வியை ஒரு குழந்தைக்குப் பெண்ணே தாய் நிலையில் நின்று ஆசிரியரயாகப் போதிக்கிறாள். அவள் நினைத்தால் எந்நிலைக்கும் ஒரு குழந்தையை ஆளாக்கி விட முடியும்.

மேலும் பெண் கல்வி சிறப்பைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் பெண் கல்வி பற்றி நிறையப் பேசியவர். குடும்பத்தில் தாய் தான் வாத்திச்சி எனக் குடும்ப விளக்கு என்னும் காப்பியத்தில் பாடுகிறார்.

**பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்**
**அவள் வாத்திச்சி. அறைவீடு கழகம்**
**தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை**[10]

இவ்வாறு பெண் கல்வியின் சிறப்பைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் கூறுகிறார்.

**முடிவுரை**

ஹரணி படைப்புகளில் பெண்ணியம் ஒரு கோட்பாடு அல்லாது உயிரோட்டம் உள்ள அனுபவ உலகம். பொருளாதாரம், உடல், குடும்பம், மொழி, கல்வி, மணம், பாலினச் சிக்கல் ஆகிய அனைத்திலும் பெண்கள் எதிர்க்கொள்ளும் சிக்கல்களையும் அவர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பின் பல வடிவங்களையும் எழுத்தாளர் ஹரணி தன் படைப்புகளின் சுட்டிக் காட்டியுள்ளார்.

**அடிக் குறிப்புகள்**

1. திறனாய்வுக்கலை - பெண்ணியத் திறனாய்வு
2. பாரதிதாசன் - குடும்ப விளக்கு
3. புறநானூறு . பா . 312
4. குறுந்தொகை . பா. 135
5. பாரதியார் - கும்மி பாட்டு
6. ஹரணி பெண்ணிய கட்டுரைதொகுதி. 7
7. திருக்குறள் . பா . 45
8. திருக்குறள் . பா . 65
9. திருக்குறள் . பா ..69
10. பாரதிதாசன் -குடும்ப விளக்கு

**துணைநூல் பட்டியல்**

1. தி.சு. நடராசன், திறனாய்வு கலை பாவை பிரிண்டர்ஸ் சென்னை, பதிப்பு 2016
2. பரிமேலழகர், திருக்குறள் உரை எம் கோபாலகிருஷ்ணமசாரியார், பதிப்பு 1938
3. வா. வே. சுப்ரமணியன், சங்க இலக்கிய நூல்கள் மணிவாசகர், பதிப்பகம் சென்னை பதிப்பு 2010
4. ஹரணி, பெண்ணியல் திறனாய்வுகள் தஞ்சாவூர் பதிப்பு 2004
5. பாரதிதாசன், குடும்ப விளக்கு செந்தமிழ் நிலையம், திருச்சி பதிப்பு 1948